**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் – 45 ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Camera) பொருத்துதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை**

அரசாணை(நிலை) எண்.121

நாள்.10.12.2020
சார்வரி, கார்த்திகை மாதம் 25–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண்.த1/7814/2020,
நாள் 19.04.2020 மற்றும் 08.05.2020.

------

ஆணை:-

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் 2020–2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> "மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் பெண்குழந்தைகளின் பாதுகாப்பில் மிகவும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின் படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 63 மாணவியர் விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணவியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்"

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில் ஆதிதிராவிடர் நல ஆணையரிடமிருந்து பெறப்பட்ட மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், இத்துறையின் கீழ் 488 ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன எனவும், இவற்றுள் முதற்கட்டமாக மாவட்டந்தோறும், மாணாக்கர் எண்ணிக்கை அதிமாக உள்ள ஒரு விடுதி என 32 மாவட்டங்களில் 32 விடுதிகளிலும், 2–ம் கட்டமாக சென்னை மாவட்டத்தில் இயங்கிவரும் 22 விடுதிகளிலும் ஏற்கனவே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன எனவும், இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களது அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு 3–ம் கட்டமாக 45 ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு விடுதி ஒன்றுக்கு ரூ.1,50,000/– வீதம் 45 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட அனுமதி ஆணை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டு சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட வேண்டிய கல்லூரி விடுதிகளின் விவரத்தினையும் இணைத்தனுப்பியுள்ளார்.

(த.பி.பா)

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததில், அரசாணை எண். 249, நிதித்(BG.I)துறை, நாள் 21.05.2020-இல் இயந்திரமும் சாதனமும் வாங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் படியும் மற்றும் கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக விடுதிகள் காலவரையின்றி மூடப்பட்டுள்ள நிலையில் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 45 ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட (CCTV Camera) தற்போது நிர்வாக ஒப்புதல் மட்டும் வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்திற்கென கொள்முதல் செய்ய வேண்டிய கண்காணிப்பு கேமராக்கள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி விதிகளை பின்பற்றி விலை நிர்ணயிக்கப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும். உரிய ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி ELCOT நிறுவனத்திடமிருந்து பெறப்படும் விலைப்பட்டியலுடன் விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்புக் கோரும் கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன்அலுவல் சார்பற்ற எண்.46438/ நிதித்(ஆதி(ம)பந) துறை/2020, நாள்.08.12.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

பெறுநர்:-
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை- 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை- 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 008.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.
மாநில கணக்காயர், சென்னை-600 018/35.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 008.
அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொ-I/வ.செ.பொ-II)துறை, சென்னை- 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை- 600 009.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/12/2020
பிரிவு அலுவலர்.
10/12/2020

**இணைப்பு**

**அரசாணை(நிலை) எண்.121, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை, நாள்.10.12.2020**

| வ. எண். | விடுதியின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 2 | வால்பாறை அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 3 | கோயம்புத்தூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 4 | சிங்கநல்லூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 5 | கோயம்புத்தூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 6 | பொள்ளாச்சி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 7 | கடலூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கடலூர் |
| 8 | கடலூர் அரசு ஆதிந ஐடிஐ மாணவியர் விடுதி | கடலூர் |
| 9 | தருமபுரி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தருமபுரி |
| 10 | தருமபுரி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தருமபுரி |
| 11 | காரிமங்கலம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தருமபுரி |
| 12 | நிலக்கோட்டை அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திண்டுக்கல் |
| 13 | ஈரோடு அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | ஈரோடு |
| 14 | கிருஷ்ணகிரி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | கிருஷ்ணகிரி |
| 15 | மூன்றுமாவடி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | மதுரை |
| 16 | மேலூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | மதுரை |
| 17 | மயிலாடுதுறை அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | நாகப்பட்டினம் |
| 18 | நாமக்கல் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | நாமக்கல் |
| 19 | நாமக்கல் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | நாமக்கல் |
| 20 | உதகமண்டலம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | நீலகிரி |
| 21 | பெரம்பலூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | பெரம்பலூர் |
| 22 | வேப்பூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | பெரம்பலூர் |
| 23 | வேப்பந்தட்டை அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | பெரம்பலூர் |
| 24 | இராமநாதபுரம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | இராமநாதபுரம் |
| 25 | சின்ன திருப்பதி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | சேலம் |
| 26 | சேலம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | சேலம் |
| 27 | தலைவாசல் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | சேலம் |
| 28 | சிவகங்கை அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | சிவகங்கை |
| 29 | காரைக்குடி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | சிவகங்கை |
| 30 | ஒரத்தநாடு அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தஞ்சாவூர் |
| 31 | தஞ்சாவூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தஞ்சாவூர் |
| 32 | பெரியகுளம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தேனி |
| 33 | தூத்துக்குடி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | தூத்துக்குடி |
| 34 | காந்திநகர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருநெல்வேலி |

| | | |
|---|---|---|
| 35 | பாளையங்கோட்டை அரசு ஆதிந கல்லூரி மாணவியர்விடுதி | திருநெல்வேலி |
| 36 | திருத்தணி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருவள்ளூர் |
| 37 | பொன்னேரி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருவள்ளூர் |
| 38 | திருவண்ணாமலை அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருவண்ணாமலை |
| 39 | மன்னார்குடி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருவாரூர் |
| 40 | நன்னிலம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருவாரூர் |
| 41 | திருவாரூர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருவாரூர் |
| 42 | திருச்சி அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | திருச்சி |
| 43 | வாலாஜா அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | இராணிப்பேட்டை |
| 44 | விழுப்புரம் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | விழுப்புரம் |
| 45 | விருதுநகர் அரசு ஆதிந கல்லூரி மாணவியர் விடுதி | விருதுநகர் |

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

//உண்மை நகல்//

10/12/2020

பிரிவு அலுவலர்

10/12/2020